# பிரஜை ஆர்வலர்களுக்கான அடிப்படை தொடர்பாடல் தொழினுட்பம்

## Basic Communications Technology for Citizen Activists



# பிரஜை ஆர்வலர்களுக்கான அடிப்படை தொடர்பாடல் தொழினுட்பம்

## அறிமுகம்

"பிரஜை ஆர்வலர்களுக்கான அடிப்படை தொடர்பாடல் தொழினுட்பம்" என்பது மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தின் மும்மொழி வெளியீடாகும். மிகவும் பிரபல்யமான தகவல் தொழினுட்பம் மற்றும் ஜிமெயில், யுடியூப், பேஸ்புக் அவற்றுடன் புதிய ஊடக தளங்களுக்காக கிராமமட்ட பிரஜை ஆர்வலர்களை அறிமுகப்படுத்துவதற்கு எளிய மொழியை பயன்படுத்தியுள்ளமையாகும்.

சமூக ஊடக செயற்பாடுகள் தாக்கம் செலுத்தும் இந்த நவீன யுகத்தில், அவர்களின் தொடர்பாடல்கள் மற்றும் வலைப்பின்னல் உத்திகளை திறமையாகவும் திறம்படவும் ஒழுங்கமைப்பதற்கு இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை பற்றி வளர்ந்து வரும் பிரஜை ஆர்வலர்களுக்கு கற்பிப்பதே இந்த எளிமையான கையேடாகும்.

இந்த கையேடானது வாசிப்பவர்களுக்கு இலத்திரனியல் தகவல் தொடர்பாடல் மற்றும் நவீன தகவல் தொடர்பு தொழினுட்பம் போன்றவற்றின் அடிப்படைகளை விளக்குவதுடன் மற்றும் ஜிமெயில், பேஸ்புக், வட்ஸ்அப், வைபர் போன்றவற்றை அறிமுகப்படுத்துவதுடன் மற்றும் ஆன்லைன் தொடர்பாடல்களில் உள்ள மொழி ரீதியான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உதவும் ரியல் டைம் எனப்படும் யுனிகோட் கன்வேட்டரின் பயன்கள் பற்றியும் கற்பதற்கு உதவுகின்றது. இணையத்தளத்தின் ஒவ்வொரு படிநிலையிலும் பாதுகாப்பினை பேணுவது பற்றியும் குறிப்பிடுகின்றது.

இலங்கையின் பிரஜை ஆர்வலர்களுக்கான புதுமையான மும்மொழி தகவல்கள் மற்றும் வலைப்பின்னல் வலைத்தளமான www.citizenslanka.org என்பதுடன் தொடர்பு கொள்வதை பற்றியும் இந்த கையேடானது வாசிப்பவர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றது.

தொகுப்பு - டியாகோ சாம்சன்

# உள்ளடக்கம்


பக்கம

**ஜி-மெயில்** 03
மின்னஞ்சல் என்றால் என்ன?
ஜி-மெயில் என்றால் என்ன?
ஜி-மெயில் கணக்கு ஒன்றை வைத்திருப்பதனால் ஏற்படும் நன்மைகள் எவை?
ஜி-மெயில் கணக்கொன்றை எவ்வாறு உருவாக்குவது?
ஜி-மெயிலில் உள்ள மின்னஞ்சல் செய்திகளை எவ்வாறு பார்ப்பது?
எவ்வாறு ஒரு மின்னஞ்சலை உருவாக்கலாம்?

**பேஸ்புக்** 07
பேஸ்புக் என்றால் என்ன?
பேஸ்புக் இன் நாளாந்த செயற்பாடுகள் யாவை?
பேஸ்புக் கணக்கொன்றை எவ்வாறு உருவாக்கலாம்?
உங்களின் சுயவிபர (profile) பக்கத்தை எவ்வாறு அமைப்பது?
எவ்வாறு பேஸ்புக்கினை பாவிக்கலாம்?
பேஸ்புக் அறிவித்தல்களை (notifications) எவ்வாறு பார்க்கலாம்?
ஒரு குழுவில் எவ்வாறு இணைவது
ரசிகர் பக்கத்தில் இணைவது எப்படி?

**வட்ஸ்அப் மற்றும் வைபர்** 14
வட்ஸ்அப் மற்றும் வைபர் என்றால் என்ன?
எவ்வாறு இதை உள்வாங்கிக் கொள்வது?

**இரகசியத் தன்மை மற்றும் பாதுகாப்பு** 15
இரகசியத் தன்மை மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்வது ஏன் முக்கியமானது?
நாம் அத்தகைய ஆபத்துக்களில் இருந்து நம்மை எப்படி பாதுகாத்து கொள்வது?
சமூக வலையமைப்புகளில் இரகசிய தன்மை மற்றும் பாதுகாப்பு முறைகள்

**சிடிசன் லங்கா கையேடு** 25
சிடிசன் லங்கா வின் அறிமுகம்
வலைத்தளத்தை எப்படி அணுகுவது?

**ரியல் டைம் யுனிகோட் கன்வேட்டர்** 27
யுனிகோட் கன்வேட்டர் என்றால் என்ன?
ரியல் டைம் யுனிகோட் கன்வேட்டரை எவ்வாறு பயன்படுத்துவது?

**மதிப்பீட்டு அறிக்கை** 29

# ஜி-மெயில்

## மின்னஞ்சல் என்றால் என்ன?

மின்னஞ்சல்கள் என்பது நாம் இணையத்தளம் மூலம் இலத்திரனியல் முறையில் அனுப்பும் கடிதங்களைப் போன்றதாகும். இந்த தொழினுட்பத்தின் மூலம் உலகிலுள்ள அனைவருடனும் தொடர்பு கொள்வது இலகுவானதாகும்.

## ஜி-மெயில் என்றால் என்ன?

மின்னஞ்சல்களை அனுப்புவதற்கும் பெற்றுக் கொள்வதற்கும் பயன்படும் ஒரு இலவச மின்னஞ்சல் சேவையே ஜி-மெயில் ஆகும். வேறுபட்ட வலையமைப்புகளிலும் ஏனைய தளங்களை உருவாக்கவும் அணுகவும் இது பயன்படுகின்றது.

## ஜி-மெயில் கணக்கு ஒன்றை வைத்திருப்பதனால் ஏற்படும் நன்மைகள் எவை?


முதலில் நாம் மின்னஞ்சல்களை அனுப்பலாம் மற்றும் மிகவும் எளிதாக மக்களுடன் தொடர்பு வைத்திருக்கலாம்.சில செக்கன்களில் மின்னஞ்சல்களை மாறி மாறி அனுப்புவதில் கடிதங்களை விட விரைவானது. பொதுவாக கடிதங்கள் எழுத்து வடிவில் இருந்தாலும் அதனுடன் தொடர்பு கொள்ள அதிக நேரம் செலவாகும் இதனுடன் ஒப்பிடுகையில் மின்னஞ்சல்கள் சிறந்தவை. கடிதங்களை போலவே மின்னஞ்சல்களும் சட்ட ரீதியில் செல்லுபடியானது என கூறலாம்.

சமூக வலைத்தளங்களானபேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டகிரேம், எலகிரிபோன்றவற்றை உருவாக்கவும் அணுகவும் மின்னஞ்சல் முகவரி தேவையானதாகும். இந்த தளங்களை திறக்க ஜி-மெயில் கணக்கே பயன்படுத்தபடுகின்றது. அனைத்து முக்கியமான பதிவேற்றங்களும்(updates) ஜி-மெயில் இன்பெக்ஸ்கு அனுப்பப்படும்.

## ஜி-மெயில் கணக்கொன்றை எவ்வாறு உருவாக்குவது?

1. நீங்கள் பயன்படுத்தும் இணைய உலாவியை (web browser) முதலில் திறக்க. (உதாரணம் – Internet Explorer or Chrome)
2. அடுத்து https://gmail.com என டைப் செய்து தேடுக (search) பொத்தானை அழுத்தவும்.

   இரண்டு பெட்டிகளை கொண்ட ஒரு பக்கம் உங்களுக்கு கிடைக்கும். முதல் பெட்டியில் உங்கள் ஜி-மெயில் முகவரியை குறிப்பிடுக. இரண்டாவதில் கடவுச்சொல்லை(password) குறிப்பிடவும். இந்த இரண்டு பெட்டிகளுக்கு கீழே Create accountஎன்றழைக்கப்படும் இணைப்பு காணப்படும்.



3. Create account எனப்படும் இணைப்பினை அழுத்தி செல்க.

4. பின்னர் *Create Your Google Account* என்ற புதிய பக்கம் தோன்றும். இந்த பக்கத்தில் நீங்கள் உங்கள் தனிப்பட்ட விபரங்களை குறிப்பிடுக. அவை பின்வருமாறு:


- பெயர் பகுதியில் வழங்கப்பட்ட இரண்டு வெவ்வேறான பெட்டிகளில் உங்கள் முதல் மற்றும் கடைசி பெயர்களை குறிப்பிடுக.

- அடுத்து **Choose your user name** பிரிவினை தெரிவு செய்க. இது உங்கள் இணையத்தள முகவரி. ஏனைய பயனர்களால் ஏற்கனவே பொதுவான பல மின்னஞ்சல் முகவரிகள் இங்கு எடுக்கப்பட்டுள்ளது.

- ஆகவே, தனித்துவமான ஒரு முகவரி பெயரினை குறிப்பிட முயற்சிக்கவும். நீங்கள் தீர்மானித்த முகவரி கிடைக்கவில்லையாயின், பின் வலைத்தளத்தில் someone already has that username. Try another? என்று ஒரு செய்தி காட்டும். ஆகவே சரியான முகவரி கிடைக்கும் வரை முகவரியை மீண்டும் குறிப்பிடுக.

- அடுத்து **Password and confirm** பகுதி, பல்வேறுபட்ட எழுத்துக்கள் மற்றும் இலக்கங்களை கொண்ட சரியான கடவுச் சொல்லை (password) குறிப்பிடுக. பின்னர் அந்த பகுதியை உறுதிப்படுத்த அதே கடவுச் சொல்லை (password) குறிப்பிடுக. அது பொருந்தவில்லையாயின், மீண்டும் குறிப்பிடவேண்டி இருக்கும்.


- அடுத்த பகுதியின் பிரிவுகளில் நீங்கள் பின்வருமாறு தொடர்புபட்ட தனிப்பட்ட தகவல்களை குறிப்பிட வேண்டும். பிறந்த திகதி, பால்நிலை,கையடக்கத் தொலைபேசி இலக்கம்.





- உங்களுக்கு மற்றொரு மின்னஞ்சல் முகவரி இல்லை என்பதால் **Current email address** என்ற பகுதியை வெறுமையாக விடவும்.

- Next அடுத்தது **CAPTCHA** பகுதி, அதில் கொடுக்கப்பட்ட படத்தை பார்த்து அதிலுள்ள வார்த்தைகள் அல்லது எண்களை அதேமாதிரி டைப் செய்க.

- இறுதியாக, Terms & Service and Privacy policy எனும் விடயத்தை வாசித்து வழங்கப்பட்ட பெட்டியில் அழுத்தவும்.





- அடுத்த பகுதியில் உங்கள் சுயவிபர படத்தை (profile picture) போடவும் என கேட்கும். அது தேவையில்லையெனில், அடுத்த பகுதியை (next step) அழுத்தவும்.




- அடுத்து உங்கள் கணக்கு உருவாக்கப்பட்டடு ஜி-மெயில் உங்களை வரவேற்கும்.


## ஜி-மெயிலில் உள்ள மின்னஞ்சல் செய்திகளை எவ்வாறு பார்ப்பது?

அந்த பகுதியில் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் உள்ள பிரிவுகளை தனியாக பார்க்க முடியும். அவை பின்வருமாறு: Inbox, Starred, Important, Sent mail, Drafts etc. நடுவில் அழுத்தியவுடன் தொடர்புபட்ட உள்ளடக்கம் தோன்றும்.





## எவ்வாறு ஒரு மின்னஞ்சலை உருவாக்கலாம்?

பக்கத்தில் இடது பக்க மேல் மூலையில் **Compose**என குறிப்பிடப்பட்டுள்ள சிவப்பு நிற நாடாவை பார்க்கவும். அடுத்து வலது பக்க கீழ் மூலையில் ஒரு பெட்டி தோன்றும்.




“**To**” என்று குறிப்பிடப்பட்டிருக்கும் முதல் பகுதியில் நீங்கள் செய்தியை அனுப்ப தீர்மானித்துள்ள நபரின் மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட வேண்டும்.
அடுத்து “**Subject**”என குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதியில் விரும்பிய தலைப்பினை குறிப்பிட்டு மற்றும் செய்தியை பிரதான பகுதியில் குறிப்பிடவும்.
உங்களுக்கு ஏதேனும் வெளிவாரியான இணைப்புக்களை சேர்க்க வேண்டுமாயின் “**Attach**” குறியீட்டினை பயன்படுத்தி விரும்பிய இணைப்புக்களை தெரிவு செய்க. இறுதியாக send பொத்தானை அழுத்தவும்.




## Attach Button

**பாதுகாப்பு**

- மற்றவர்களுக்கு நீங்கள் பயன்படுத்தும் பெயர் மற்றும் கடவுச்சொல் (password) போன்றவற்றை கொடுக்க வேண்டாம்.
- உங்களுக்கு தெரியாதவர்கள் அனுப்பும் பழக்கப்படாத/ விசித்திரமான மின்னஞ்சல்களை வாசிக்காதீர்கள்
- நீங்கள் ஒரு கணனி மையம் அல்லது தொலைத்தொடர்பு நிலையத்தில் உங்கள் மின்னஞ்சல் கணக்கினை திறக்கும் போது உங்கள் கடவுச்சொல்லை (password) save பண்ண வேண்டாம்.

# பேஸ்புக்

## பேஸ்புக் என்றால் என்ன?

ஒத்த கருத்துடைய உங்கள் நண்பர்கள் மற்றும் பிற நபர்களுடன் தொடர்புகளை வைத்திருக்க கூடிய ஒரு சமூக ஊடக தளமே பேஸ்புக் (Facebook) ஆகும். பல்வேறு தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு பயன்படுத்தப்படும் நாம் பயன்படுத்தும் புதிய ஊடக வடிவமாகும்.

## பேஸ்புக் இன் நாளாந்த செயற்பாடுகள் யாவை?

- கருத்துக்கள், படங்கள்? வீடியோக்கள் போன்றவற்றை பதிவேற்றம்(Upload) செய்யலாம்.
- நண்பர்களுடன் குறுஞ்செய்திகள் மற்றும் கருத்துக்களை பரிமாறலாம்.
- Facebook இன் உள்ளடக்க விடயங்களுக்கு குறிப்புக்களை அனுப்பலாம் மற்றும் லைக் பண்ணலாம்
- விளையாடலாம், வினாக்களுக்கு பதிலளிக்கலாம்,குழுக்களுடன் மற்றும் இரசிகர் பக்கங்களுடன் இணையலாம்
- பிரச்சாரங்களில் பங்குபற்றலாம்
- வலைப்பின்னல்களில் தகவல்களை பகிரலாம்

## Facebook கணக்கொன்றை எவ்வாறு உருவாக்கலாம்?

1. நீங்கள் பயன்படுத்தும் இணைய உலாவியை (web browser) முதலில் திறக்க.
2. அடுத்து https://facebook.com என டைப் செய்து தேடுக (search) பொத்தானை அழுத்தவும்




3. முகப்பு பக்கத்தின் வலது பக்க கீழ் மூலையில் Sign Up என்ற தலைப்பின் கீழ் வெறுமையான பிரிவுகளை நீங்கள் காணலாம். அதில் உங்கள் மின்னஞ்சல் முகவரி உள்ளடங்கலாக தேவையான விடயங்களை அதில் நிரப்பவும். பின்னர் உங்கள்Facebook கணக்கை திறக்க முகவரியாக அது பயன்படுத்தப்படும்.


4. அடுத்து உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு உறுதிப்படுத்திய மின்னஞ்சல் வரும், உங்கள் ஜி-மெயில் கணக்கினை திறந்து அதிலுள்ள inbox பகுதியை கிளிக்

செய்யவும். கிளிக் செய்து உறுதிப்படுத்தி கொள்ளவும் என Facebook இலிருந்து வந்த ஒரு செய்தியை நீங்கள் பார்க்கலாம். அதை கிளிக் செய்யவும்.


5. பின்னர் நீங்கள் பேஸ்புக் பக்கத்திற்கு எடுத்து செல்லபடுவீர்கள் பின்னர் உங்கள் சுயவிபர படம் உட்பட அனைத்து விடயங்களையும் திருத்திகொள்ளலாம்.

## உங்களின் சுயவிபர (profile) பக்கத்தை எவ்வாறு அமைப்பது?

- உங்கள் சுயவிபர படத்தினை (profile picture) போடவும் (பொதுமக்களுக்கும் இது கிடைக்ககூடியது ஆகவே கவனமாக இருக்கவும்)





- பேஸ்புக்இன் தேடுக (search) பகுதியில் நண்பர்களின் பெயர்களை டைப் செய்து நண்பர்களை இணைத்துக் கொள்க.




## எவ்வாறு Facebook ஐ பாவிக்கலாம்?


- Status ஐ பதிவேற்றம் செய்க.





- பேஸ்புக்கில் Chat பண்ணலாம். அதற்கு உங்கள் பட்டியலில் நண்பர்கள் இணைக்கபட்டிருத்தல் வேண்டும்.




- உங்கள் வலைப்பின்னலில் உள்ள உங்கள் நண்பர்கள் அல்லது நபர்கள் விரும்பும் நிகழ்வுகள் படங்கள் போன்றவற்றை பதிவேற்றம் செய்யலாம்.




- Facebookஇல் வீடியோக்களையும் நீங்கள் போடலாம். இது உங்கள் படங்களை போடுவதற்கான மற்றொரு வழியுமாகும்.





1. முதலில் News Feed நாடா பகுதியை அழுத்தவும்.
2. பின்னர் Add **Photos/Videos** என்ற விடயத்தை அழுத்தவும்
3. அடுத்து படத்தில் காட்டப்பட்டுள்ளது போல் தோன்றும் பெரிய கூட்டல் அடையாளத்தை அழுத்தவும்
4. பின்னர் ஒரு புதிய பக்கம் திறக்கும், உங்கள் கணினியில் உள்ள ஏதேனும் படங்கள் அல்லது வீடியோக்களை தெரிவு செய்க.
5. இறுதியாக **Post** பொத்தானை அழுத்தவும்.

## Facebookஅறிவித்தல்களை (notifications) எவ்வாறு பார்க்கலாம்?


- நண்பர் கோரிக்கைகள் (Friend Requests) - கீழே காட்டப்பட்டுள்ள சின்னத்தினை அழுத்துவதன் மூலம் உங்களுக்கு நண்பர் கோரிக்கைகளை கொடுத்திருப்பது யார் என்பதை பார்க்கலாம். நீங்கள் அவர்களின் சுயவிபர பக்கத்திற்கு சென்று பார்த்து பின்னர் அந்த நண்பர் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதா அல்லது மறுப்பதா என்பதை தீர்மானிக்கவும். அவர்கள் உங்கள் தனிப்பட்ட விடயங்களையும் பார்க்க கூடியவர்கள் ஆகையால் தெரியாத நபர்களை இணைக்க வேண்டாம் கவனமாக இருக்கவும்.




- இன்பொக்ஸ் செய்திகள் - ஆன்லைன் மற்றும் ஆ∴லைனில் உள்ள நண்பர்கள் உள்ளடங்கலாக தொடர்பு கொள்ளும் ஒட்டுமொத்த செய்திகளே இவையாகும். அவர்கள் ஆன்லைனில் இல்லாவிட்டாலும் நீங்கள் நண்பர்களின் பெயரை டைப் செய்து அவர்களின் இன்பொக்ஸ் இற்கு குறுஞ்செய்திகளை அனுப்பலாம். இது உங்களுக்கும் பொருந்தும். நீங்கள் ஆ∴லைனில் இருந்த போதும் நண்பர்கள் உங்கள் இன்பொக்ஸ்கு செய்திகளை அனுப்பலாம்.





- பொதுவான அறிவிப்புக்கள் - நீங்கள் மற்றும் உங்கள் நண்பர்கள் பகிர்ந்து கொண்டபதிவுகள், விரும்பியவைகள் மற்றும் கருத்துக்கள் அனைத்தையும் பற்றியவையே இந்த அறிவிப்புக்களாகும். மேலும் விளையாட்டு கோரிக்கைகள், ரசிகர் பக்க அழைப்புக்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.




# பேஸ்புக்பக்கங்கள் மற்றும் குழுக்கள் பற்றி

## ஒரு குழுவில் எவ்வாறு இணைவது


1. Search நாடாவிற்கு சென்று, நீங்கள் தேட விரும்பும் குழுவின் பெயரை டைப் செய்து Search சின்னத்தை அல்லது enter குறியீட்டை அழுத்தவும். நீங்கள் டைப் செய்த பெயர் அல்லது அதற்கு சமமான பெயர்களை கொண்ட குழுக்களின் பட்டியலை நீங்கள் காணலாம். அந்த குழுவின் பெயரை அழுத்துவதன் மூலம் அந்த குழுவின் உள்ளடக்கத்தை பார்க்கலாம்.





2. இந்த குழுக்கள் சில மக்களுக்கு மட்டும் திட்டமிடப்பட்டவை. அவை Closed group எனப்படும் குழுவின் உரிமையாளர் அழைக்கும் வரை நீங்கள் அதில் இணைய முடியாது





3. நீங்கள் open groups இல் இணைய விரும்பினால் group பக்கத்திற்கு சென்று **Join Group** எனப்படும் பச்சை நிற பொத்தானை அழுத்தவும். (தெரியாதவர்கள் உங்கள் குழுவில் வந்து இணைய வாய்ப்பிருப்பதனால் தெரியாத குழுக்களில் இணைவதில் கவனமாக இருங்கள்)



4. Facebook இல் நீங்கள் போடும் பதிவுகளும் குழுக்களில் போடும் பதிவுகளும் ஒத்தவையாகும். நீங்கள் விரும்பிய எதையும் பதிவேற்றம் செய்யலாம் மற்றும் எழுதலாம். ஆனால் குழு உரிமையாளரினால் குழு உறுப்புரிமைக்கு ஒப்புதல் கிடைக்கும் வரை காத்திருக்கவும்.(தேவையில்லாத உள்ளடக்கங்கள் மற்றும் பொருத்தமில்லாத விடயங்களை போடுவதனால் நீங்கள் குழுவில் இருந்து நீக்கபடுவீர்கள் என்பதால் கவனமாக இருக்கவும்)





5. news feed பக்கத்திலேயே உங்கள் அனைத்து குழு பதிவேற்றங்களும் காட்டப்படும். நீங்கள் விரும்பினால் search நாடாவில் குழுவின் பெயரை தேடி அதற்குள் போய் பார்க்கலாம்.




## ரசிகர் பக்கத்தில் இணைவது எப்படி?

1. உங்களுக்கு தேவையான ரசிகர் பக்கத்தில் இணைந்து கொள்ளsearch நாடாவிற்கு சென்று தேடுக. குழுத் தேடலில் நீங்கள் இணைய விரும்பும் ரசிகர் பக்கம் மற்றும் அதற்கு சமமான ரசிகர் பக்கத்தை கொண்ட பெயர் பட்டியலை காணலாம்.




2. நீங்கள் இணைய விரும்பும் பக்கத்தின் பெயரை அழுத்தவும். அல்லது ரசிகர் பக்கத்தில் இணைய வலது பக்கத்தில் உள்ள Like பொத்தானை அழுத்தவும். அந்த பக்கத்தை அழுத்தினால் timeline பக்கத்தில் உள்ள ரசிகர் பக்கத்திற்கு உங்களை அழைத்து செல்லும்.



# வட்ஸ்அப் மற்றும் வைபர்


### வட்ஸ்அப் மற்றும் வைபர் என்றால் என்ன?


கையடக்கத் தொலைபேசிகளில் இணையத்தளத்தை பயன்படுத்தி குறைந்த விலையில் மிகவும் விரைவாக குறுஞ்செய்திகளை பரிமாற்றிக் கொள்வதற்கு உள்ள பயன்பாடுகள் ஆகும்.

**முக்கியத்துவம் - இவற்றை பதிவிறக்கம் (download) செய்யவும் உள்வாங்கி கொள்ளவும் பொருத்தமான தொலைபேசியில்data connection தேவை.**


### எவ்வாறு இதை உள்வாங்கிக் கொள்வது?

- நீங்கள் android கையடக்க தொலைபேசியை பயன்படுத்தினால் Play Store க்கு சென்று வட்ஸ்அப் மற்றும் வைபர் இரண்டையும் தேடி பதிவிறக்கம் (download) செய்யவும். (கணக்கு விபரம் கேட்கப்பட்டால் மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல்லை குறிப்பிடுக)
- பதிவிறக்கம் (Download) செய்து முடிந்ததும் உங்கள் தொலைபேசி இலக்கம் கேட்கப்படும். அதை குறிப்பிடவும்.






- அடுத்து நீங்கள் உங்கள் தொலைபேசி குறுஞ்செய்தி மூலம் ஒரு குறியீட்டு எண்ணை பெற்றுக் கொள்வீர்கள். அதை Copy பண்ணிenter பண்ணினால்வட்ஸ்அப் மற்றும் வைபரில் உறுதிப்படுத்தப்படும்.
- இறுதியாக அந்த application ஐ திறந்தால் அனைத்து தொடர்புகளும் தொடர்பு பட்டியலில் save ஆகி இருக்கும் இந்த இரு விடயங்களும் தனித்தனியாக காட்டப்படும்.





- ஆன்லைனில் உள்ள அனைத்து தொடர்புகளையும் பார்க்கலாம் மற்றும் உரைகள், படங்கள், வீடியோக்கள், போன்றவற்றை அனுப்பலாம் அத்துடன் உங்கள் தொலைபேசியில் இணைய இணைப்பின் மூலம் அழைப்புக்களை மேற்கொள்ளல்.

# இரகசியத் தன்மை மற்றும் பாதுகாப்பு

## இரகசியத் தன்மை மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்வது ஏன் முக்கியமானது?



இணையத்தளம்அனைவருக்கும் வெளிப்படையானதால் உங்கள் பெறுமதியான தரவுகள் திருடப்பட மற்றும் சட்டவிரோதமாக பயன்படுத்தப்பட வாய்ப்பு இருப்பதனால் இணையத்தளத்தின் இரகசியத் தன்மை மற்றும் பாதுகாப்பு பேணப்படுதல் முக்கியமானதாகும்.

## உங்கள் தகவல்கள் ஏன் திருடப்படுகின்றன?

- தகவல்கள் தவறாக பயன்படுத்தப்படும் வரை அதன் முக்கியத்துவம் தெரிவதில்லை. படங்கள், பெயர்கள் மற்றும் தனிப்பட்ட தகவல்கள் போன்றன Facebook கணக்குகளில் இருந்து திருடப்பட்டு உண்மையான உரிமையாளரை களங்கப்படுத்தும் வகையில் தவறான முறையில் பயன்படுத்திய அறிக்கைகள் காணப்படுகின்றன. உங்கள் தகவல்களை இணைய திருடர்கள் (Hackers) தவறாக பயன்படுத்தி உங்களை மிரட்டி அச்சுறுத்த முடியும்.

- ஆன்லைனில் பொருள் வாங்குபவர்கள் பொருத்தமான தளங்களில் கடன் அட்டை தொடர்பான தகவல்களை குறிப்பிட்டு கடன் அட்டையை பயன்படுத்தி கொள்வனவு செய்வர். சில இணைய திருடர்கள் போலியான பக்கம் உருவாக்கல் போன்ற வெவ்வேறு வழிமுறைகளை பயன்படுத்தி கடன் அட்டை தொடர்பான தகவல்களை திருடி கொள்வனவு செய்வர் இதன் போது கணக்கு சீட்டுகள் (bills) அனைத்தும் உரிமையாளரின் கணக்கிற்கு வருவதனால் அவர்கள் உதவியற்றவர்களாக்கப்படுவர்.

- இணைய தாக்குதல் நோக்கங்களுக்காகவும், திருடவும் இணைய திருடர்கள் இணையத்தினூடாக வைரஸ்கள் அனுப்புவார்கள். அதிகமான நேரங்களில் உண்மையான உரிமையாளர்கள் தமது கணினிகளில் இவை நடைபெறுவது குறித்து எதுவித ஆதாரமும் கொண்டிருப்பதில்லை.இணையத் திருடர்கள் வெளியிடும் தகவல்களை அவர்களுக்கு கொடுக்காமல் பாதுகாப்பதுடன் உங்கள் சாதனங்களை பாதுகாத்து உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும்.

- இணையத் திருடர்கள் அவர்களின் குற்றவியல் நடவடிக்கைகளுக்காக எமது தகவல்களை பயன்படுத்துவார்கள் இதனால் சட்ட அமுலாக்க விடயங்களில் அவர்களை தேடுவது கடினமானதாக இருக்கும்.

- இணையத்தின் மூலம் அணுகி நண்பர்களாகி தகவல்களை பெற முயற்சிக்கும் தெரியாத நபர்களிடம் முக்கியமாக பெண்கள் கவனமாக இருக்கவும். இவ்வாறான பல வழக்குகள் ஊடகங்களில் அறிக்கையிடப்பட்டுள்ளன. உங்கள் தனிப்பட்ட தகவல்களை யாருக்கும் பகிர வேண்டாம்.

### நாம் அத்தகைய ஆபத்துக்களில் இருந்து நம்மை எப்படி பாதுகாத்து கொள்வது?

இத்தகைய ஆபத்துக்களில் இருந்து எம்மை நாம் பாதுகாத்து கொள்வதற்கு இவ்வாறான பல வழிகள் உள்ளன.

- தெரியாத வலைத்தளங்களில் தனிப்பட்ட தகவல்களை குறிப்பிட வேண்டாம்.
- இணையத் தளத்தில் பார்க்கும் எல்லா விளம்பர இணைப்புகளையும் அழுத்த வேண்டாம்.
- பேஸ்புக், டுவிட்டர் போன்ற உங்கள் சமூக வலையமைப்புகளில் தெரியாத நபர்களை இணைத்து கொள்ள வேண்டாம்.
- இணையத்தளத்தில் இருந்து தெரியாத கோப்புகளை (files) பதிவிறக்கம் (download) செய்ய வேண்டாம்.
- உங்கள் கணினியை பாதுகாக்க நல்லதொரு வைரஸ் காட் (virus guard) ஐ பதிவிறக்கம் (download) செய்யவும்.

### சமூக வலையமைப்புகளில் இரகசிய தன்மை மற்றும் பாதுகாப்பு முறைகள்


## Google

**கூகுள்**

- உங்கள் இணைய உலாவியை (browser) திறந்து கூகுள் search நாடாவில் **Google 2 step setup என டைப் செய்யவும்.**
- கீழே காட்டப்பட்டுள்ளது போல வரும் **Turn on 2-Step Verification** என்பதை அழுத்தவும்.





- கீழே காட்டப்பட்டது போல 2-Step verification என்பதை அழுத்தவும்.





- அடுத்துலோட் ஆகிய பக்கத்தில் வலது பக்க கீழ் மூலையில் உள்ள Start setup பொத்தானை அழுத்தவும்.
- அந்த படிவத்தில் கேட்கப்பட்ட தகவல்களை நிரப்பவும்.

- உங்கள் தொலைபேசி இலக்கத்தை சரியாக இடவும். பின்னர் send code பொத்தானை அழுத்தவும்.




- நீங்கள் உள்ளிட்ட தொலைபேசி இலக்கத்திற்கு ஒரு குறியீட்டு இலக்கம் வரும். அடுத்த பக்கத்தில் தொலைபேசியை சரிபார்த்து மற்றும் குறியீட்டு இலக்கத்தை சரியாக இடவும்.
  Verifyஐ அழுத்தவும்.





- நீங்கள் பயன்படுத்தும் கணினி நம்பத் தகுந்த கணினியாக இருந்தால் tick புள்ளியை அழுத்தவும் மற்றும் அடுத்த பக்கத்தில் load ஆகும் பக்கத்தில் உள்ள next ஐ அழுத்தவும்.


- இப்போது Confirm பொத்தானை அழுத்தவும். இப்பொழுது உங்கள் கூகுள் கணக்கு பாதுகாக்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் நீங்கள் உங்கள் கணக்கை புதிய கணினியில் திறக்கும் போது உங்களிடம் குறித்த குறியீட்டு இலக்கம் கேட்கப்படும்.

## Facebook
### பேஸ்புக்


- Facebook இல் எவ்வளவு தான் இரகசிய அமைப்புக்களை பயன்படுத்தினாலும் உங்கள் தரவுகள் 100% பாதுகாக்கப்பட்டவையல்ல. ஆனால் உங்கள் தனிப்பட்ட தரவுகளை யார் அணுகலாம் என்பதை கட்டுப்படுத்த நீங்கள் சில எளிய முறைகளை பயன்படுத்தலாம்.
- உங்கள் Facebook பக்கத்திற்கு சென்று உங்கள் அண்மைய விடயங்களை யார் பார்க்கலாம் என்பதை தெரிவு செய்க.




- உங்கள் தரவுகளை பாதுகாக்க சிறந்த வழி **only me** எனப்படும் தேர்வினை தெரிவு செய்தலாகும். இதனால் உங்களின் செய்திகளை யாரும் பார்க்க முடியாது. உங்களின் செய்திகளை நபர்கள் பார்க்க வேண்டுமானால் **Friends** தேர்வினை தெரிவுசெய்க. இதனால் உங்களின் நண்பர்கள் மட்டுமே இதனை பார்க்கலாம். நீங்கள் **Public** எனப்படும்தேர்வினை தெரிவு செய்தால் உங்களின் செய்திகளை அனைவரும் தேடி கண்டறியலாம்.
- பேஸ்புக்கின் இரகசியத் தன்மை மற்றும் பாதுகாப்பினை கண்காணிக்கவும் நிர்வகிக்கவும் **Privacy settings and tools** என்ற பக்கத்தை அணுகுவதே சிறந்த வழியாகும்.
- பேஸ்புக் பக்கத்தின் வலது பக்க மேல் மூலையில் தெரியும் அம்புக்குறி அடையாளத்தை அழுத்தவும்.பின்னர் கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது போல drop list ஐ பார்க்கலாம். settings நாடாவை அழுத்தவும்.



- கீழே காட்டப்பட்ட படத்தை போல இடது பக்கத்தில் Privacy நாடாவை தெரிவு செய்க.





- நீங்கள் விரும்பியதை பொருத்தமானதை உள்ளிடவும். **Only Friends** என்பதே இரகசியத் தன்மை மற்றும் பாதுகாப்பிற்கு சிறந்த பரிந்துரையாகும்.


- அதே பக்கத்தில் Privacy நாடாவிற்கு மேலே உள்ள**Security** நாடாவை அழுத்தவும். கீழே காட்டப்பட்டுள்ளது போல உங்கள் சுயவிபரத்தின் பாதுகாப்பு நிலையினை மேம்படுத்தி கொள்க.


**Login alerts (லொகின் அலட்ஸ்)**

❖ இந்த அம்சத்தை செயல்படுத்தினால்,நீங்கள் அல்லது வேறு எவரேனும் உங்கள் விபரத்துள் நுழைந்தால் நீங்கள் எச்சரிக்கை செய்யப்படுவீர்கள்.




## Login approvals





- get started பொத்தானை அழுத்தவும் பின்னர் உங்கள் தொலைபேசி விடயங்களை இணைக்கவும் மற்றும் குறியீட்டுடன் ஒரு குறுஞ்செய்தியை பெறுவீர்கள்.





- Continue பொத்தானை அழுத்தவும் உங்கள் திரையில் நிறைவு செய்யப்பட்டதாக ஒரு செய்தி வரும்.


## Trusted Contacts

- ❖ ஒருவேளை உங்கள் கணக்கிற்கு செல்ல முடியவில்லையாயின் இது தான் முன்எச்சரிக்கையாகும்.




- ❖ நீல நிற நாடாவை அழுத்தவும் **trusted contacts** என்பதை தெரிவு செய்க பின்னர் வரும் பொத்தான் அதே விடயத்தை குறிப்பிடும்








- ❖ உங்களுக்கு நம்பத்தகுந்த நண்பர்களின் பெயர்களை குறிப்பிட்டு அவர்களை தெரிவுசெய்க. இறுதியாக **confirm** பொத்தானை அழுத்தவும்.

## Deactivate

### செயற்படுத்தாமலிருத்தல்

ஒரு நபருக்கு வாகனம் ஓட்டும் போது அதை நிறுத்துவது பற்றி கட்டாயம் கற்று கொடுக்க வேண்டும். வாகனம் ஓட்டுதல் மற்றும் பேஸ்புக் பாவனை போன்றன இரு வேறு செயற்பாடுகள் என்றாலும், உங்கள் கணக்கினை எவ்வாறு நீக்குவது என்றும் தெரிந்திருத்தல் முக்கியமானதாகும்.




- ❖ உங்கள் கணக்கில் Deactivate என்பதை அழுத்தவும். காரணங்கள் கேட்கப்படும். நீங்கள் விரும்பிய ஒரு தேர்வினை தெரிவு செய்க.
- ❖ உங்களின் கடவுச்சொல் கேட்கப்படும். அதை குறிப்பிட்டவுடன் நீங்கள் கணக்கிலிருந்து வெளியே வருவீர்கள் கணக்கு செயலற்று போகும்.
- ❖ உங்கள் கணக்கை மீண்டும் செயற்படுத்த வெறுமனே பேஸ்புக் பக்கத்தை திறந்து உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல்லை வழமைபோல கொடுக்கவும்.

## வைபர் (Viber) இலக்கங்களை எவ்வாறு நிறுத்தலாம்/ தடுக்கலாம்?


குறிப்பிட்ட தொடர்புகளில் இருந்து வரும் வைபர் அழைப்புக்கள் மற்றும் செய்திகளை நீங்கள் தடுக்க விரும்பினால் அந்த இலக்கங்களை நிறுத்த வேண்டும்.

அவ்வாறு செய்ய பின்வரும் வழிமுறைகளை பின்பற்றவும்

- உங்கள் வைபருக்கு செல்க.





- திரையின் வலது பக்க கீழ் மூலையில் உள்ள நாடாவை திறக்க.



- Settings என்ற பிரிவை தெரிவு செய்க.




- Settings பிரிவில் உள்ள Privacy நாடாவை திறக்க.




- இப்பொழுது நீங்கள் Block lists எனப்படும் பிரிவை காணலாம். அதனை திறக்க.




- பின் திரையின் கீழ்ப் பகுதியில் **+ Block number** எனும் ஒரு நாடாவை நீங்கள் பார்க்கலாம். இப்போது insert number எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் பெட்டியொன்றை நீங்கள் காணலாம்.நிறுத்த வேண்டிய இலக்கத்தை குறிப்பிட்டு அவ்விலக்கத்தை அழுத்தவும்.





- நீங்கள் நிறுத்திய இலக்கத்தை சரிபார்க்கவும், நிர்வகிக்கவும் வேண்டும் என்றால் அதே படிமுறையை பின்பற்றுக.


## வட்ஸ்அப் (Whatsapp) இலக்கங்களை எவ்வாறு நிறுத்தலாம்/ தடுக்கலாம்?

வைபரின் செயன்முறையை ஒத்த செயன்முறையாகவே இது காணப்படுகின்றது. ஆனால் ஏற்கனவே தொலைபேசியில் பாதுகாக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்படாத இலக்கங்களை நிறுத்துவதற்கு இரண்டு வழிகள் காணப்படுகின்றன.


❖ ஏற்கனவே பாதுகாக்கப்பட்ட இலக்கங்களை நிறுத்துவதற்கு கீழே உள்ள படங்களில் காட்டப்பட்டுள்ளது போன்ற படிமுறைகளை பின்பற்றுக.




- Button > Settings > Account > Privacy
- அடுத்து Blocked Contacts நாடாவை அழுத்துக.
- அடுத்த திரையில் வலது பக்க மேல் மூலையில் ஒரு படம் தெரியும்
- பின் நீங்கள் நிறுத்த விரும்பும் தொடர்பு இலக்கத்தை தெரிவு செய்க.




❖ தெரியாத இலக்கங்களை நிறுத்துவதற்கு அவர்கள் உங்களை தொடர்பு கொள்ளும் போதுblock பொத்தானை அழுத்தவும்.



# சிடிசன் லங்கா

## ஆரம்பிக்கின்றது

### சிடிசன் லங்காவின் அறிமுகம்

நான்கு முக்கியமான விடயங்களை பற்றிய தகவல்களை பகிரக்கூடிய ஒரு வலைத்தளமே இதுவாகும். அவை பின்வருமாறு: குடியுரிமை சபைகள், மொழி சமத்துவம், இலங்கையின் சட்டங்கள் மற்றும் அரசியல் அமைப்பு உருவாக்கம்.

### பிரஜைகள் சபை

வலைத்தளத்தின் இந்த பிரிவின் கீழ் தீவின் அனைத்து பகுதிகளிலும் உருவாகும் பிரஜைகள் சபைகளின் அண்மைய நிகழ்வுகளை காணலாம். பிரஜைகள் சபை பற்றிய அனைத்து பதிவேற்றங்களையும் இங்கே பார்க்கலாம் அத்துடன் ஏனைய பிரஜைகள் சபையிலிருந்து வரும் பதிவேற்றங்களையும் பார்க்கலாம். இந்த பகுதியானது இரட்டை மொழிக் கொள்கை செயற்படுத்தப்படுவதுடன் தொடர்ச்சியாக அது கொண்டு செல்லப்படும் எனவும் எதிர்பார்க்கின்றது.

### மொழி சமத்துவம்

வலைத்தளத்தின் இந்த பிரிவின் கீழ் தற்போது இலங்கை முகங்கொடுக்கும் அண்மைய மொழி ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் நீங்கள் பார்த்து மற்றும் புரிந்துகொள்ள கூடியதாக இருக்கும். அனைத்து மொழி தொடர்பான குறைகளை பற்றிய தகவல்களை வாசித்து புரிந்துகொள்ளலாம். மொழி பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை மக்களுக்கு கற்பிப்பது மற்றும் சமமான மொழி உரிமைகளை நிறுவுவதன் மூலம் மொழிப் பிரச்சினைகளில் இருந்து வெளிவருவதற்கு மக்களுக்கு உதவுவதுமே இந்த பிரிவின் பிரதான நோக்கமாகும்.

### இலங்கை சட்டங்கள்

வலைத்தளத்தின் இந்த பிரிவின் கீழ் பிரஜைகளின் நாளுக்கு நாள் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் இலங்கையின் சட்டங்கள் பற்றி காணலாம். நாட்டின் ஊழலின் மட்டத்தை குறைக்கவும் மற்றும் அதிகாரிகள் நடத்தும் சட்டவிரோத செயல்களை அறிவதற்கும் சட்டத்திலுள்ள உரிமைகளை தெரிந்து கொள்வது உதவியாக இருக்கும். இந்த சட்டங்கள் இவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன அவை,தொழிலாளர் சட்டம் அல்லது பணியாளர் உரிமைகள், குடும்பச் சட்டம் அல்லது வீட்டு வன்முறை, நிலச் சட்டம் அல்லது வீட்டு உரிமைகள், சுற்றாடல் சட்டம், மொழி உரிமைகள், மனித உரிமைச் சட்டம், குற்றவியல் சட்டம், சிவில் சட்டம் மற்றும் சர்வதேச சட்டம்.

### அரசியல் அமைப்பு உருவாக்கம்

வலைத்தளத்தின் இந்த பிரிவின் கீழ் நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் ஆதரவாக அரசியல் அமைப்பினை மீள் நிர்மாணம் செய்யக்கூடிய அனைத்து பதிவேற்றங்களையும் காணலாம்.

## வலைத்தளத்தை எப்படி அணுகுவது?

- மேற்கோள் குறியீடு இல்லாமல் உங்கள் இணையத் தளத்தின் முகவரி நாடாவில் (address bar) பின்வரும் இணைய முகவரியை குறிப்பிடுக.

  “www.citizenslanka.org”

- அடுத்து Citizen Lanka வலைத்தளத்தின் முகப்பு பக்கத்திற்கு உள்வாங்கப்படுவீர்கள்.

- திரையில் காட்டப்படும் மூன்று பெட்டிகளில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் விரும்பிய மொழியை தெரிவு செய்க.
- விரும்பிய மொழியை தெரிவு செய்த பின் மேலே இருந்து கீழ் வரைக்கும் வலைத்தளத்தின் முழு உள்ளடக்கமும் அந்த ஒரு மொழியில் காட்டப்படும்.

**நாடாக்கள் (Tabs) மற்றும் அவற்றின் செயற்பாடுகள்**

**முகப்பு (Home)**-இந்த நாடாவை அழுத்தினால்முதல் பக்கமாகிய வரவேற்பு பக்கத்திற்கு மீண்டும் எடுத்து செல்லபடுவீர்கள்.

**பற்றி (About)** - இதனை அழுத்துவதன் மூலம் எமது பணி மற்றும் நோக்கு பற்றிய விபரங்களை உள்ளடக்கிய எமது ஒழுங்கமைப்பு பற்றிய தகவல்களை வாசிக்கலாம்.

**பதிவேற்றம் (Updates) -** இதனை அழுத்துவதன் மூலம் நாட்டின் பிரஜைகளுடன் தொடர்புடைய தற்போதய விடயங்கள் தொடர்பானவற்றை கேட்கலாம்.

**தொடர்புகள் (Contact) –**இதனை அழுத்துவதன் மூலம் எம்மை எவ்வாறு தொடர்பு கொள்வது பற்றிய தகவல்களை பெறுவீர்கள். வரைபடத்தின் மூலம் எமது முகவரியுடன் எமது இடமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உங்களின் தொடர்பு தகவல்கள் மற்றும் குறிப்புக்களை நிரப்பக் கூடிய ஒரு படிவமும் எம்மிடம் உள்ளது.

**பிரஜைகள் சபைகள் –**இதனை அழுத்துவதன் மூலம் நாடு முழுவதும் உருவாகும் பிரஜைகள் சபைகளுடன் தொடர்புபட்ட உள்ளடக்கங்களை வாசிக்க மற்றும் பகிர முடியும். இவை வேறுபட்ட விடயங்களின் கீழான முக்கிய உள்ளடக்கங்கள் ஆகும் அவை, நல்லாட்சி, சூழல், பெண்கள் மற்றும் சிறுவர்கள், இளைஞர் விவகாரங்கள், மொழி மற்றும் கலாசாரம் மற்றும் அரச அதிகாரிகளின் வகிபாகம் மற்றும் பொறுப்புணர்வு. உங்கள் பிரஜைகள் சபை பற்றிய உள்ளடக்கத்தினையும் இங்கே காணலாம்.

**மொழி சமத்துவம் –** இந்த பகுதியை அழுத்துவதன் மூலம் நீதிசார் விடயங்களை அணுகல் மற்றும் கல்வியை அணுகும் போது, தகவல்களை அணுகும் போது, நிர்வாகம் மற்றும் நாளாந்த வாழ்வு போன்றவற்றுடன் தொடர்புபட்ட மொழி தொடர்பான குறைகளை அறியலாம்.

**அரசியல் அமைப்பு உருவாக்கம்** -இந்த பகுதியை அழுத்துவதன் மூலம்அரசியல் அமைப்பு உருவாக்கம் பற்றிய அனைத்து பதிவேற்றங்களையும் வாசிக்கலாம் அத்துடன் கட்டுரைகள் மற்றும் வாக்களித்த போஸ்ட்டுகளுக்கு கீழ் உங்கள் கருத்துக்களை குறிப்பிடலாம் மற்றும் பகிரலாம். நீங்கள் பிரஜைகள் சபை வலைத்தளத்திற்கு அனுப்பிய கடிதங்களையும் இங்கே பகிரலாம்.

**தேடுக–** வலது பக்க மேல் மூலையில் உள்ள search சின்னத்தை அழுத்தவும்.Search bar ஐ உள்ளடக்கிய புதிய பக்கம் காட்டப்படும். நீங்கள் எதனை கண்டறிய போகின்றீர்கள் என்பதை தீர்மானித்து அதன் முக்கிய வார்த்தையை பதிவு செய்க.

**Share Buttons** – உங்கள் ஒவ்வொரு பக்கத்தின் ஒவ்வொரு போஸ்ட்டின் கீழும் பேஸ்புக், டுவிட்டர் மற்றும் கூகுள் பிளஸ் ஆகியவற்றின் குறியீடுகளை நீங்கள் காணலாம். இந்த பொத்தான்களை அழுத்தினால்,Citizens Lanka வலைத்தளத்தில் உள்ள உள்ளடக்கங்களை ஏனைய சமூக ஊடக தளங்களுக்கு பகிரலாம்.

# ரியல் டைம் யுனிகோட் கன்வேட்டர்

யுனிகோட் கன்வேட்டர் என்றால் பொதுவாக நாம் பயன்படுத்தும் உரைகளை இணையத்தள பாவனைக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கும் ஒரு மென்பொருளாகும் (software). ஆங்கிலத்திற்கு மாற்றியமைக்க வேண்டிய வசனத்தை விரும்பிய மொழியில் டைப் செய்த ஒன்றையே இது வேண்டி நிற்கின்றது.

ஆங்கில கற்கையில் உள்ள சரியான உச்சரிப்பு வசனங்களை பயனர் குறிப்பிட வேண்டும். இது 'SMS' மொழிக்கு ஒத்ததாக காணப்படுகின்றது. பயனர் ஆங்கில எழுத்துக்களை மற்றும் எவ்வாறு உச்சரிப்புக்கள் காணப்படுகின்றது என்பதை தெரிந்திருக்க வேண்டும்.

ரியல் டைம் யுனிகோட் கன்வேட்டரை எவ்வாறு அணுகுவது?

- நீங்கள் பயன்படுத்தும் இணைய உலாவியை (web browser) முதலில் திறந்து ''ரியல் டைம் யுனிகோட் கன்வேட்டர்'' என குறிப்படுக.
- கீழே காணப்படும் படத்தில் உள்ளது போல ஒரு இணைய இணைப்பினை காணலாம்.





- பின்னர் அந்த இணைப்பினை அழுத்தினால் தளத்தின் முகப்பு பக்கத்திற்கு செல்லலாம்




- நீங்கள் மாற்றுவதற்கு விரும்புகின்ற வகையினை தெரிவு செய்யுமாறு கேட்கப்படும். யுனிகோட்டில் உங்களுக்கு தேவையான படி மொழியை மாற்றுவதற்கான வகையை

தெரிவு செய்யுமாறு கேட்கப்படும். உங்களுக்கு சிங்கள மொழியில் மாற்ற வேண்டுமாயின் சிங்கள யுனிகோட் (Sinhala Unicode) எனப்படும் விடயத்தை தெரிவு செய்க. தமிழில் மாற்ற வேண்டுமாயின் தமிழ் யுனிகோட் (Tamil Unicode) என்பதை தெரிவு செய்க.

- நீங்கள் மாற்ற வேண்டிய உரையினை சதுரத்தின் மேல் டைப் செய்தால் அதனை மாற்ற வேண்டிய யுனிகோடை கீழே காணலாம்.
- அதனை செய்து முடித்தவுடன் நீங்கள் 'copy' பொத்தானை அழுத்தவும்.





# மதிப்பீட்டு அறிக்கை

**'ஆம்'** அல்லது **'இல்லை'** என பெட்டியில் அடையாளமிடுக (ஆம் எனின் (✓) மற்றும் இல்லை எனின் (✕) இடுக)

1. இணையத்தளத்தில் எளிய முறையில் உலாவியை (browsing) செய்வது எவ்வாறு என்பதை புரிந்து கொண்டமை ☐
2. ஜி-மெயில் கணக்கொன்றினை வெற்றிகரமாக உருவாக்குதல். ☐
3. பெற்றுக் கொண்ட மின்னஞ்சல்களை சரிபார்க்கவும் மற்றும் மின்னஞ்சல்களை அமைப்பதற்கான கற்றலையும் புரிந்து கொண்டமை ☐
4. சமூக ஊடகங்களை பயன்படுத்துவதன் நோக்கத்தினை தெரிந்து கொண்டமை ☐

☐

5. பேஸ்புக் கணக்கினை வெற்றிகரமாக உருவாக்குதல்
6. பேஸ்புக்கில் முகப்பு படத்தினை பதிவேற்றம் செய்தல் ☐
7. பேஸ்புக்கில் நண்பர்களை எவ்வாறு சேர்த்துக் கொள்வது என்பது பற்றி கற்றமை ☐
8. பேஸ்புக்கில் செய்திகளை உருவாக்குதல் மற்றும் பதிவு செய்தல் ☐

☐

9. பேஸ்புக்கில் நண்பர்களுக்கு எப்படி செய்திகளை அனுப்புவது பற்றி கற்றமை
10. வைபர் மற்றும் வட்ஸ்அப் போன்றவற்றை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற அடிப்படைகளை கற்றமை ☐

**11.** இணையத்தளத்தை பாவிக்கும் போது பாதுகாப்பு மற்றும் இரகசியத் தன்மையை பராமரிப்பதன் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டமை ☐

**12.** இணைய பயன்பாட்டின் போது வரும் ஆபத்துக்களை எவ்வாறு குறைப்பது என்பது பற்றி கற்றமை ☐

**13.** முன்னர் உருவாக்கப்பட்ட ஜி-மெயில் கணக்கினை வெற்றிகரமாக பாதுகாத்தல் ☐

**14.** முன்னர் உருவாக்கப்பட்ட பேஸ்புக் கணக்கினை எவ்வாறு பாதுகாத்தல் என்பது பற்றி கற்றமை ☐

**15.** வட்ஸ்அப் மற்றும் வைபரில் தேவையற்ற தொடர்புகளை நிறுத்துவது பற்றி கற்றமை ☐

**16.** சிடிசன் லங்கா வலைத்தளத்தின் நோக்கம் பற்றி புரிந்து கொண்டமை ☐

**17.** சிடிசன் லங்கா வலைத்தளத்தினை எவ்வாறு அணுகுவது என்பது பற்றி புரிந்து கொண்டமை ☐

**18.** தகவல்களுக்காக வலைத்தளத்தை எவ்வாறு உலவுவது (browse) என்பது பற்றி புரிந்து கொண்டமை ☐

**19.** பிரஜைகள் சபை வலைத்தளத்தில் 2 பிரஜைகளின் அறிக்கைகள் வெற்றிகரமாக இடப்பட்டுள்ளது ☐

**20.** பிரஜைகள் சபை வலைத்தளத்தினூடாக ஆன்லைன் பிரச்சாரத்தில் வெற்றிகரமாக கலந்து கொண்டமை ☐

